**கவனிக்க.**-2020.01.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2158 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

2158 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 54 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 55 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம் சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

53-B 81596-405 (2020/01)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## வ/ப பொறுப்புள்ள கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஒலின்வே இன்டர்நெஷனல் ( பிறைவட்) லிமிட்டட்

கம்பனி பதிவிலக்கம் : பீவீ 00216829

கூட்டிணைப்புத் திகதி: 2019, ஒற்றோபர் 23

பதிவு முகவரி : 133/3,வெலங்கொள்ள வீதி, யந்தாம்பலாவ, குருநாகல்

கம்பனிச் செயலாளர்.

1- 288

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அக்சென்ட் மெனேஜ்மன்ட் ( பிறைவட்) லிமிடட்

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016. 01.26

கம்பனி பதிவிலக்கம் : பீவீ 111479

பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.130, 4/8, மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு -11

கம்பனிச் செயலாளர்.

1- 296

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ரிப்கி டிரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பீவீடி) எல்டிடீ

பதிவிலக்கம் : பீவீ 121208

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.28

பதிவு முகவரி: இல. 256/1, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி- 06

கம்பனிச் செயலாளர்.

1- 347

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சொர்கம் மெட்ரிமொனி ( பிரைவட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 00218364

பதிவுத் திகதி : 2019, திசெம்பர் 10

பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 102/A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

கம்பனிச் செயலாளர்.

1- 374

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லேரியாவ, புது நகரம், அக்கொண, இலக்கம் 1/ 1 என்ற இடத்தில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 597371098V ஐ உடைய) லக்ஸ்மி சந்திராணி விக்ரமஆரச்சி ஆகிய நான், கொழும்பு மாவட்டத்தின் பிரசித்த நொத்தாரிசு காரியகரவன தோண இந்திராணி சேனாரத்னவினால் 2008, மாசி மாதம் 09 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 479 ஆம் இலக்க அற்றோணித்தத்தவத்தின் மூலம் எனது அற்றோணித் தத்துவக்கராராக முல்லேரியாவ, புது நகரம் , அக்கொண, இலக்கம் 1/1 என்ற முகவரியில் வதியும் நந்தன அருண விக்கிரமஆரச்சி (தே.அ.அ.இல. 542702109V ஐ உடைய) என்பவரை நியமித்திருந்த அற்றோணித் தத்துவத்தை 2020, தை மாதம் 10 ஆந் திகதி முதற்கொண்டு சட்டரீதியாக இரத்துச் செய்வதோடு இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் அறிவிக்கின்றேன்.

லக்ஸ்மி சந்திராணி விக்ரமஆரச்சி.

1- 376

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

நொச்சியாகம, முதிதாகம, சத்துரங்க இல்லத்தில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 606280483V ஐ உடைய மாலனி கஜசிங்ஹகமகே ஆகிய நான், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு திரு. W.M.C.B. வீரக்கோன் , 2012, மாச்சு மாதம் 20 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 533, குருநாகல் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம், நொச்சியாகம, முதிதாகம, சத்துரங்க இல்லத்தில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 730931514V உடைய ஆறுமுகம் ஜயகுமாருக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை இந்த அறிவித்தல் தினத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இத்தால்

இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இது முதற்கொண்டு மேற்படி அற்றோணித் தத்துவம் மூலம் மேற்கொள்ளப்படும் எந்த வொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக இருக்கப்போவ தில்லையென அறிவிக்கின்றேன்.

மாலனி கஜசிங்ஹகமகே.

1- 377

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தெஹிவளை, றொபர்ட் பிளேஸ், இல.15 எனும் முகவரியைச் சேர்ந்த (தற்போது இல. 44, Hawkesbury Street, Pakenham, VIC 3810 Australia) சமீர கசுன் எரவ்வல ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு பத்மி உதேனிகா அபேசிறிவர்த்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 769 மற்றும் 2014.08.16ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தின் மூலம் தெஹிவளை, றொபர்ட் பிளேஸ், இல. 15 எனும் முகவரியைச் சேர்ந்த ஹல்பிட்ட ஆச்சாரிகே நாலினீ ஸ்வர்னலதா என்ப வருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இது முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் எனது சார்பாக குறித்த அற்றோணித் தத்துவகாரரால் நிகழ்த்தப்பட்ட எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியத்தருகின்றேன்.

சமீர கசுன் எரவ்வல.

1- 398

---

## ஏல விற்பனைகள்

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் பதிலாள்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

2183/757/146 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்:-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, பஹிரவகந்த 236 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு, பஹிரவகந்தயில் அமைந்துள்ள, நிக்கமெடித்தேஹேன என அழைக்கப்படும் ( 46228 ஆம் இலக்க கண்டி மாவட்ட நீதிமன்ற வழக்கின் 04 ஆம் இலக்கத் துண்டின் பிரிவு) அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். சி. ஓ.டி. லா மோட்டே அவர்களால் வரையப்பட்ட 1979, ஓகத்து மாதம் 26 ஆந் திகதியிடப்பட்ட 2023/ A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4E1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 0ஏ.0றூ.20பே.

அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹனீபா பீபியின் காணியில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அடி அகலமான பாதை உரிமையுடன்.

பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹபுதந்திரி , பிரசித்த நொத்தாரிசு என்.எஸ். ரணதுங்க ,பிரசித்த நொத்தாரிசு பி.எஸ். அபேவிக்ரம ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 27, 2014,ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30, 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதியிகளிடப்பட்ட 2183/757/146 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கண்டியைச் சேர்ந்த மேரி ஆன் திலீஷியா விக்கிரமசிங்க மற்றும் பத்திரவத்தே சமன் பத்திரண எனவும் பத்திரணவத்தே சமன் பத்திரண ( இதன் பின்னர் கூட்டுறவுக் கடன் பெற்றவர் என அழைக்கப்படும் ) அவர்களால்,

டிஎப்சீசீ வங்கி பீ எல்சீ க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை றொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;

(4) மொத்த விளம்பரச் செலவு 90,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,000;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011- 2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
128 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணைய தளம்: www.sandslanka.com

1- 285

---

## செலான் வங்கி பீஎல்சீ - யக்கல கிளை
## பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

யக்கலயைச் சேர்ந்த கனேபொல ஆச்சிகே மைத்திரி சந்தருவன் கனேபொல கடப்பாடுடையவராகவும்/ ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே. டி. ரீ. கே. களுஆரச்சியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.08.01 ஆந் திகதியிடப்பட்ட 958 ஆம் இலக்க மற்றும் 2015.03.27 ஆந் திகதியிடப்பட்ட 1069 ஆகிய இரு ஈட்டு முறிகள் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.

***2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே செலான் வங்கி பீஎல்சீயினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.***

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பதிவுப் பிரிவிற்குள், சியனே கோறளையின் மெதபத்துவில் கம்பஹா மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள், யக்கல வடக்கு இல. 231, கிராம அலுவலர் எல்லைக்குள் யக்கலயில் அமைந்துள்ள ரண்வெலி பெதெச வரிமதிப்பீட்டிலக்கம் 64E ஐக் கொண்ட கொனிகஹலந்த, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜே.பீ. என். ஜயசுந்தரவினால் வரையப்பட்ட 2014.07.04 ஆந் திகதியிடப்பட்ட 10256 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் விஸ்தீரணம் (0ஏ.1றூ.5பே.) மற்றும் சொல்லப்பட்ட 10256 ஆம் இலக்க வரைபடத்திக்கேற்ப கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துமுடனான இடம்.

அத்துடன் வழியுரிமையுடனானதும் மேலானதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள காணி.

01. யக்கலயில் அமைந்துள்ள கோனிகஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட1996.11.15ஆந் திகதியிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள 6J8 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஒன்பது தசம் ஐந்து ஒன்று பேர்ச். (0ஏ.0றூ.9.51பே.)

02. யக்கலயில் அமைந்துள்ள கோனிகஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதி யிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6J9 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஆறு தசம் ஏழு இரண்டு பேர்ச். ( 0ஏ.0றூ.6.72பே.)

03. யக்கலயில் அமைந்துள்ள கோனிகஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதி யிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6L என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஐந்து தசம் ஆறு பேர்ச். ( 0ஏ.0றூ.5.6பே.)

04. யக்கலயில் அமைந்துள்ள கோனிகஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல்.ஜே.லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந்

திகதியிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6K என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் மூன்று தசம் ஆறு மூன்று பேர்ச்.(0ஏ.0றூ.3.63பே.)

**காணிக்கும் பிரவேசிக்கும் வழி.**- யக்கல நான்கு வழிச் சந்தியிலிருந்து புறப்பட்டு கொழும்பு கண்டி வழியாக கண்டிப்பக்கத்துக்கு சுமார் 100 மீற்றர் சென்றதும் இடது பக்கத்துக்குத் திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் வரை மாநகர சபை வீதியூடாகச் செல்லும் போது வலது கைப்புறத்தில் இந்த இடம் அமையப்பெற்றுள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தலுக்கு.**- 2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2019.05.27 ஆந் திகதிய "டேலி மிரர்", "லங்காதீப" மற்றும் 2019.06.03 ஆந் திகதிய "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(1) கொள்வனவு விலையின் 10 %;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்கான வரி 01%;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா2500;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000 வீதம்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90 வீதத்தையும் இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

திணைக்களத் தலைவர், (சட்டம்), செலான்வங்கி பீ.எல்.சீ. , இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 3.

தொ. பே. இலக்கங்கள்: 011-2456485,011- 2456479 மற்றும் 011-2456488 .

சந்திமா பிரியதர்சினி கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
பகிரங்க ஏல விற்பனையாளர்,
விலை மதிப்பீட்டாளர்.

இல. 9-I ஹைலெவல் வீதி , சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி: 071-4318252.

1-378

---

**செலான் வங்கி பீஎல்சீ - நாவல கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

"கடன்பட்டோர் /ஈடுவைத்தோர்" என்ற வகையில் தெஹிவளையைச் சேர்ந்த பரணவிதானலாகே டில்ஷான் எசிநகத் பொதேஜு என்பவரினால் வத்தளை பதிவு அலுவலகத்தில் பதிவு இல. பீவீ 69089 கம்பனி கூட்டிணைப்பு சட்டம் இலக்கம் 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத்திற்கமைய செரன்டீப் பூட்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்திற்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .

தொடர்மாடி X/FO/U1

தொடர்மாடி X/FO/U1, வரிமதிப்பீட்டு இல. 41, பாடசாலை ஒழுங்கை, தெஹிவல இன் விபரம் பின்வமாறு.-

(அ) தொடர்மாடி X/FO/U1 தரைதளம்
(ஆ) தொடர்மாடி API தரிப்பிடம்

(அ) தொடர்மாடி X/FO/U1 தரைத்தளம் எல்லை விபரம் பின்வருமாறு
வடக்கு : CEI ;
கிழக்கு : CEI மற்றும் CE3 ;
தெற்கு: AP1 மற்றும் இணை பகுதி AP2 இணை;
மேற்கு : வீதி.
தாள் நிலம்: கொங்கிறீட் நிலப் பகுதி;
கூரை: அடுக்குமாடி X/F1/U1
தளத்தின் பரப்பு : 133 சதுர மீற்றர்.

(ஆ) தொடர்மாடி API (தரிப்பிடம்) தரைத்தளம் எல்லை விபரம் பின்வருமாறு:
வடக்கு : அடுக்குமாடி X.FO/U1 மற்றும் CEI;
கிழக்கு : CEI;
தெற்கு : CEI மற்றும் இணை பகுதி AP2;
மேற்கு : அடுக்குமாடி X/FO/U1.
தாள் நிலம் : கொங்கிரீட் பகுதி
சிகரம் : அடுக்குமாடி X/F1/U1,
தளத்தின் பரப்பு : 14 சதுர மீற்றர்.

அடுக்குமாடித் தொடரின் பொது விதிகள் இதில் அடங்கும்
(அ) அடுக்குமாடித் தொடர் அமைந்திருக்கும் பகுதியின் தோற்றம்.
(ஆ) அடித்தளம், தூண், இரும்பு உத்தரம், ஆதாரங்கள் மற்றும் கட்டடத்தின் கூரை

(இ) மின்சாரம் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, மறுபரவல், நீர்க் குழாய், நீர்த் தாங்கி, நிலத்தடி தொட்டி, மேல் நீர்த் தாங்கி, பம்ப் ஹவுஸ், குழாய்கள்,கழிவு நீர் குழாய் மற்றும் கழிவுப்பொருள் அகற்றல் போன்ற மத்திய சேவைகள்.

(ஈ) பராமரிப்பு பாதுகாப்பு அல்லது பொது பாவனை மற்றும் எல்லா பகுதிகளுக்கும் மற்றும் இடத்திற்கு தேவையான வசதிகள்

உரிமம் பெற்ற அளவையாளரான காமினி பீ.தொடன்வெல என்பவரினால் 2013, யூன் 24 ஆம் திகதியிடப்பட்ட தொடர்மாடியின் நிலவரைபட இல. 9623 இற்கு அமைய அதில் வரையறை செய்து விபரிக்கப்பட்ட பொது ஆதாரப் பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) CE1 (i) இடம் - நிலத்தளம்
(ii) விபரம் - திறந்த வெளி
(iii) அடுக்குமாடிக்குச் செல்லும் வழி - அடுக்குமாடிக்குச் செல்லும் வழி X/FO/U1 மற்றும் X/F1/U1

(ஆ) CE2 (i) இடம் - நிலத்தளம்
(ii) விபரம் - திறந்த வெளி

(இ) CE3 (i) இடம் -நில தளம் மற்றும் மேல் தளம்
(ii) விபரம் - ஏறும் வழி
(iii) அடுக்குமாடிக்குச் செல்லும் வழி - இடைநிலை-X/F1/U1அடுக்குமாடிக்குச் செல்லும் வழி

**அடுக்குமாடிச் சொத்துக்களுக்கான அணுகல்**

அங்கு சுதந்திரமாக செல்வதற்குரிய உரிமை மற்றும் உள்ளே செல்ல வெளிவர அங்கு செல்வதற்குரிய உரிமை அந்த இடத்திற்கு உரியவர்களும் அவர்கள் உற்றார் உறவினர்களும் எந்த நேரத்திலும் உட்செல்லல் வெளிவரும் உரிமை மற்றும் ஊழியர்கள், குத்தகைக்காரர்கள், பார்வையாளர்கள் அழைப்பாளர்கள் மற்றும் இதை போல் மற்றும் இதை போல் மற்றும் உரிமை கொண்ட அனைத்து நபர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து நோக்கங்களுக்காகவும் அடுக்குமாடி தொடர்பாகவும் அறிவிப் பாளரால் பகல் அல்லது இரவு நேரங்களிலும் இது போன்ற உரிமைகளையும் பிற நபர்களுடனும் பொதுவானதும் மற்றும் மின்சார வயர்கள் அதன் மேலாகவும் அதனூடகவும் செல்லும் உரிமை மற்றும் நீர், கேஸ் குழாய், கழிவு குழாய் மற்றும் பிரதான மற்றும் மற்றைய கருவிகள் வீதியினூ டாகவும் அதன் மேலாகவும் செல்ல உரிமையுடையது. இது அனுமதிபெற்ற நிலஅளவையாளர் காமினி டீ. தொடன்வெல என்பவரினால் தொடர்மாடி நிலவரைபட இல. 9623 இல் 2013, யூன் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளை பள்ளே பத்து கல்கிசை - தெஹிவளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிவளை வட்டாரம் இல. 05 , ஹத்போதிவத்த இல. 10350 கிராம அலுவலர் பிரிவில் களுபோவிலவில் அமைந்துள்ள "ஹொரகஹாவத்த"என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். எச்.பீ. யோசவ் என்பவரால் 1967, பெப்புருவரி 12 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 77 இல் துண்டு 6 இல் சகலதும் அளவிடப்பட்டு குறிக்கப்பட்டு மூன்று பேர்ச் (0ஏ.0றூ.03பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2020, சனவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- வில்லியம் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி வீதியால் சுமார் 1 கி.மீ. தூரம் வரையுள்ள கொஹுவளை வரை சென்று இடது பக்கமாக உள்ள அல்விஸ் அவன்யூவினால் திரும்பி சுமார் 100 மீ. வரை சென்று அங்கிருந்து இடதுபக்கமாக திரும்பி 125 மீ. தூரம் சென்று இடது பக்கமாக உள்ள ஸ்கூல் வீதியால் 100 மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட அடுக்குமாடி இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- தயவு செய்து 2019.10.18ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.10.23ஆந் திகதிய "டெய்லி மிரர்" , "லங்கா தீப" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 1000 ரூபா.
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;

(7) கொள்வனவு விலையின் மிகுதி 90 % அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர்-சட்டத்துறை, செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 3" என்னுமிடத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456491,011-2456481.

" மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 2572940

1- 375